ராஜாங்கனய பிரதேச சபை - 2023

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ராஜாங்கனய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்து / உரிமை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ராஜாங்கனய பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள்,

நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள் மற்றும் பொருத்தமான சட்ட விதிகளிற்கிணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 04 பாதை நிர்மாணங்களிற்குரிய நிறுத்தி வைத்தல் ரூபா 307,244 தொகை நிலையான சொத்தாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பாதை நிர்மாணங்களின் நிறுத்தி வைத்தல் உள்ளடங்களாக சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செலவுகள் உறுதி செய்யப்பட்ட பாதை, பாலம் மற்றும் மதகுகளிற்கு உரிய நிறுத்தி வைத்தல் ரூபா 34,311,502 வை விடுவிக்கும் வரை சொத்தாக கணக்கீடு செய்யாததால் அந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 3,431,150 குறைவாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லையென. | பெறுமானத் தேய்வு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) முன்னர் கிடைத்த நீர் கட்டணம் ரூபா 6,400 வை நடைமுறை பொறுப்பாக காண்பிக்காது கிடைக்க வேண்டிய நீர் கட்டணத்திற்கு பதிலீடு செய்திருந்ததால் நிலுவை நீர் கட்டணம் ரூபா 6,400 இனால் குறைந்திருந்தது. | எதிர்வரும் ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதெ்ன. | சரியாக பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2023 மே 12 இன் 02/2021(viii) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | விரல் அடையால இயந்திரத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அச்சு பிரதியின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச் சென்ற நேரங்கள் சரியென உறுதி செய்யாது ரூபா 241,251 ஆன மேலதிநேர படிகள் மற்றும் விடுமுறை தின படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | அத்தியவஷிய கடமைகளில் ஈடுபடுத்தியுள்ள மட்டுப்படுத்திய நபர்களிற்காக வருகை பரீட்சிக்கப்பட்டு மேலதிநேர படிகள் மற்றும் விடுமுறை தின படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 8,332,419 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 8,712,211 ஆனது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 நடைமுறைக் கணக்கிற்கு உரியதான மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 7,822,866 ஆன நிதி விளைவற்று நிலவியதுடன் அந் நிதியை குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மேலதிக நிதியை 03 அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட விலைகளின் பிரகாரம் பொருத்தமான வங்கி ஒன்றில் நிலையான வைப்பில் வைப்புச் செய்யவுள்ளதென. | கணக்குகளில் காணப்படும் காசு மீதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வகை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,146,600 | 2,136,555 | 2,180,555 | 400 | 1,360,500 | 1,534,240 | 973,440 | 44,400 |
| (ii) | வாடகை | 15,566,838 | 9,636,323 | 9,508,176 | 5,413,310 | 11,802,082 | 10,058,192 | 9,588,502 | 5,285,163 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 415,250 | 504,225 | 730,650 | - | 318,000 | 423,530 | 335,530 | 226,425 |
| (iv) | ஏனைய வருமானம் | 15,465,500 | 7,959,557 | 11,277,183 | 4,051,778 | 19,163175 | 7,502,844 | 7,130,990 | 7,369,404 |
| | | 32,594,188 | 20,236,660 | 23,696,564 | 9,465,488 | 32,643,757 | 19,518,806 | 18,028,462 | 12,925,392 |

### 2.3.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) பிரிவின் பிரகாரம் சபை அதிகார எல்லையில் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள அசையும் சொத்தொன்று அல்லது அசையும் சொத்து வகையொன்றின் வருடாந்த பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு வீதவரி விதிக்க வேண்டிய போதும், அந்த பிரதேசங்களை இனங்கண்டு சட்ட அறிவுறுத்தல் பிரகாரம் வீதவரி விதிக்க 2023 ஆண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதன மதிப்பீட்டின் பின்னர் வீதவரி விதிக்கவுள்ளதென. | வீதவரி விதிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | 60 கடையறைகளிற்காக மீளாய்வாண்டு அறவிட வேண்டிய ரூபா 3,083,200 வில் 58 சதவீதமான ரூபா 1,778,410 தொகையை அறவிட்டிருக்காததுடன் அந்த கடையறைகளிற்காக 2023 சனவரி 01 திகதியன்று ரூபா 4,780,213 ஆன | நிலுவை கடை வாடகை அறவிடப்படுகின்றது அறவிடப்படாத கடை வாடகை தொடர்பாக நியாய சபையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதென. | சட்ட நடவடிக்கை எடுத்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலுவை வாடகையிலிருந்து ரூபா 3,330,400 ஆன 69 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| வாகன வாடகை நிலுவை ரூபா 163,250 தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுப்பதென. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | அறிவித்தல் பலகைக்காக அறவிட வேண்டிய ரூபா 95,725 தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுப்பதென. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,709,500 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 558,500 தொகை கிடைத்திருக்கவில்லை. | தற்போது கோரப்பட்டுள்ளது. விரைவில் கிடைக்குமென எதிர்பார்ப்பதென. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள் வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் முக்கிய 30 விடயங்களை மேற்கொள்ள துணைச் சட்டம் விதிக்க இயலுமாகவிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த விடயங்களிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 இனங்கணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரிமாபுர இலக்கம் 04 கொண்ட கடையறை 2022 ஆண்டிற்கு முன்னரிலிருந்து திருத்த நடவடிக்கை எடுக்காததால் குத்தகை வழங்க | ஏற்றுக் கொள்வதென. | திருத்தி குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாததால் ரூபா 36,000 அளவான நட்டம் சபைக்கு ஏற்பட்டுள்ளது. | | |
| (ஆ) | 2020 பெப்ரவரி 18 திகதி ரூபா 57,000 செலுத்தி கொள்வனவு செய்த விரல் அடையால இயந்திரத்திற்காக சேவை உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்காது புறக்கணித்ததால் அந்த இயந்திரம் 2023 ஒக்டோபர் 18 திகதி முதல் செயலற்று இருந்தது. அதன் காரணமாக ரூபா 53,944 செலுத்தி மீண்டும் புதிய இயந்திரத்தை கொள்வனவு செய்ய சபைக்கு நேரிட்டிருந்தது. | சேவைக்காக உடன்படிக்கை செய்யும் போது மற்றும் திருத்தியதற்காகவும் கொடுப்பனவு செய்ய நேரிடுவதால் சேவை உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளவில்லையென. | பொருளாதார ரீதியான நலன்கள் கிடைக்கும் வகையில் சேவை உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |

**3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த ஆதன கணிப்பீடு மற்றும் வருடாந்த தொலை தொடர்பு கோபுரம் தொடர்பான கணிப்பீட்டை மேற்கொள்ளாததால் சபை அதிகார பிரதேசத்தில் உள்ள வியாபார, கைத்தொழில் மற்றும் வியாபார நிலையங்களிற்காக அறவிட வேண்டிய வியாபார வரி கைத்தொழில் வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடல் சரியானதென உறுதியாகவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | ஆதன கணிப்பீட்டை வருடாந்தம் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | அதிகார பிரதேசத்தில் காணப்படும் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்களை இனங்காண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள குறித்த நிறுவனங்களின் உரிமையாளர்களை அறிவூட்ட மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்களை இனங்காண வேண்டும். |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஒக்டோபர் 31 திகதி உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிட்ட 2017/02 சுற்றறிக்கையின் 07 பிரிவின் பிரகாரம் சபை ஆதனமொன்றை 03 ஆண்டுகளிலும் அதிக காலத்திற்கு குத்தகை வழங்குவதெனில் அதற்காக விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும் அவ் | 05 ஆண்டுகளிற்கு கடையறைகள் குத்தகை வழங்கவில்லை என்பதுடன் 03 ஆண்டுகளின் பின்னர் உடன்படிக்கையை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது மற்றும் உடன்படிக்கை காலஎல்லையை குறிப்பிடாது சபையினால் கடையறைகளை குத்தகை வழங்கப்பட்டிருந்தன. | | |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 5 ஆம் கட்டை வாராந்த சந்தையிலுள்ள கோழி இறைச்சிக் கடை மற்றும் புத்தளம் சந்தியிலுள்ள கோழி இறைச்சிக் கடைகள் 2023 ஆண்டு முழுவதும் விளைவற்று நிலவின. | ஏற்றுக் கொள்வதென. | இந்த ஆதனத்தை குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஓட்டத்திலிருந்து அகற்றி 06 ஆண்டுகள் கடந்திருந்த கெப் வண்டியொன்று மற்றும் ஓட்டத்திலிருந்து அகற்றி 03 ஆண்டுகள் கடந்திருந்த FOTON வண்யொன்றை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்காது விளைபற்று நிறுத்தி வைக்கப்பட்டிந்தது. | ஏற்றுக் கொள்வதென. | பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் தேவைபாடின்றி சபைக்கு வழங்கியிருந்த கழிவுப் பொருள் சேகரிக்கும் வாகனம் பயன்படுத்தப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அதிகார பிரதேசத்தில் கழிவுகள் சேகரிப்பது குறைவாகையால் தேவையான சந்தர்ப்பத்தில் மாத்திரம் பயன்படுத்தப்படுவதென. | பயன்படுத்தாத சந்தர்ப்பங்களில் வாடகைக்கு வழங்கி வருமானம் ஈட்ட கவனம் செலுத்த வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 11 விடயங்கள் செயற்படுத்தப்படவில்லை. அவ் விடயங்களில் 06 இற்காக மதிப்பீட்டு பெறுமதிகள் குறிப்பிடப்பட்டு இருக்காததுடன் எஞ்சிய 05 விடயங்களிற்காக ரூபா 810,000 மதிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | திட்டமிட்டவாறு நிகழ்சித் திட்டங்களை ஆண்டினுள் செயற்படுத்த வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2011 நவம்பர் 08 திகதி பரிந்துரைத்திருந்த போதும் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விரைவில் பெற்றுத் தருவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |